சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 23.03.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **81/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-14 |
| சாட்சியின் பெயர் | : | பாலாஜி |
| தந்தை பெயர் | : | மோகன் |
| கிராமம் | : | ஏத்தக்குடி |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | சிவில் இன்ஜினியர் |
| வயது | : | 30 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சிவில் இன்ஜினியராக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சார்ந்தவன் ஆவேன். அ.சா.1 மோகன் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்குத்தெரியும். கடந்த 31.12.2016-ம் தேதி இரவு அதாவது 01.01.2017-ம் தேதி அதிகாலை 12.45 மணிக்கு புத்தாண்டு விழா கொண்டாடவேண்டும் என்பதற்காக எங்கள் தெருவைச்சேர்ந்தவர்கள் ரோட்டில் புத்தாண்டை வரவேற்கும் வகையில் எழுதியது சம்பந்தமாக ஊருக்குள் ஒரே

பிரச்சனையாக இருந்து வந்தது நான் என்ன நடக்கிறது என்பதை வேடிக்கை பார்க்க போனேன் கூட்டத்தில் இருந்தவர்கள் என்னை அடித்துவிட்டார்கள். எனக்கு கையில் வீக்கம் ஏற்பட்டது நான் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். இது தொடர்பாக போலிசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

சம்பவ தேதியன்று ஆஜர் எதிரிகள் என்னையும், என் ஊரைச்சேர்ந்த அ.சா.1 மோகன், அ.சா.2 பார்த்திபன், அ.சா.3 சுந்தர், அ.சா.4 ராஜராஜன், அ.சா.5 கவிதா, அ.சா.6 ரவி ஆகியோர்களை எதிரிகள் ஜாதி பெயரை சொல்லி தாக்கினார்கள் என்றும், இதில் காயங்கள் ஏற்பட்டது என்றும், போலிசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுடன் சமாதான செய்து கொண்டோம் என்றும், அதனால் எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.03.23 18:35:08 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.